கவிகள் கண்ட கனவு

202

இளங்கோ

வள்ளுவர்

202
3-55

திருத்தக்கதேவர்

சேக்கிழார்

பர்

O-,6x
N55
102817

முத்து

இமயப் பதிப்பகம்

கவிகள் கண்ட கனவு

கே. கோதண்டபாணி பிள்ளை
ச. சச்சிதானந்தம் பிள்ளை
அ. ச. ஞானசம்பந்தம்
க. சோமசுந்தரம்
டி. பி. மீனாட்சிசுந்திரம்

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்

தமிழ் இலக்கியத்தின் தலை சிறந்த கவிஞர்கள் ஐவர் கண்ட கனவு என்ன என்பதை ஐந்து பேரறிஞர்கள் புதுமுறையில் ஆராய்ந்து சென்னை வானொலி நிலையத்தில் பேசினார்கள்.

இதனை வெளியிட அனுமதி தந்த வானொலிநிலையத்தினர்க்கும் இதை மேற்படி நிலையத்திலிருந்து நமக்கு எழுதி உதவிய திரு. வி. வீராசாமி அவர்கட்கும் நம் நன்றி உறியது.

தோ. ந. வீரராகவன்,
இமயப் பதிப்பகம்.

முதற்பதிப்பு: ஜூன், 1955

விலை அணா ~~எட்டு~~. 10

அச்சிட்டோர்:
தாரா அச்சகம், நாகை.

கவிகள் கண்ட கனவு - - -

- - - இளங்கோ

[கே. கோதண்டபாணி பிள்ளை]

இளங்கோ என்னும் தமிழ்ப் பெரும்புலவரைத் தமிழ்நாடு நன்கு அறியும். சிலப்பதிகாரம் அல்லது கண்ணகியின் கதையை நெஞ்சை அள்ளும் காவிய மாகப் பாடிப் பெரும்புகழ் பெற்ற பெரும்புலவர் இளங்கோ. இவர் வாழ்க்கையே ஒரு கனவாக அமைந்தது. இளங்கோ, சேரலாதன் என்னும் சேர நாட்டு மன்னனுக்கு மகன். சேரன் செங்குட்டுவன் என்னும் அரசனுக்குத் தம்பி. இளங்கோ தன் தந்தையோடு மணிமண்டபத்திருந்தபோது அங்கு வந்த சோதிடன் ஒருவன் இளங்கோவை நோக்கி அவருக்கு அரசனாக இருக்கும் இலக்கணம் பொருந்தி யுள்ளது என்று கூறினான். இளங்கோவிற்குக் கோபம் மூண்டது. முறைப்படி தன் அண்ணன் செங்குட்டுவன் அல்லவா அரசனாக வேண்டும். தான் இல்லற வாழ்க்கையில் இருந்தால் ஒருக்கால் தான் அரசனாக நேர்ந்தாலும் நேரலாம்; சிலர் சூழ்ச்சி செய்து தன்னை அரசனாகச் செய்தாலும் செய்துவிட லாம். ஆதலின் இதற்கெல்லாம் இடம் கொடாதபடி, தன் அண்ணனுக்கு எவ்வித துன்பமும் நேர்ந்து விடாதபடி, தான் துறவு பூண்பதே நன்று என்று

துறவு பூண்டவர் இளங்கோ. இல்லற வாழ்வி லிருந்தும், அரசியல் வாழ்விலிருந்தும் உடனே விலகிக் கொண்டார்.

இவ்வுலகில் பதவியைக் கருதி பாதகங்கள் செய் வோர் பலர் உண்டு. அரசுரிமையைக் கவர்ந்து கொள்ள தந்தையைக் கொன்றவர்கள் உண்டு. தமையனைக் கொன்று அரசைக் கைப்பற்றியவர்கள் உண்டு. இளங்கோவோ அரசை மட்டும் அன்று இல்லற வாழ்வையும் வேண்டாமென்று துறந்தவர். மோட்ச உலகத்தில் அரசாளக் கனவு கண்டார். துறவு பூண்டார்.

மனித வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள் எது—எந்த லட்சியம் உயர்ந்தது, சிறந்தது—என்று கனவு கண்டவர் இவர். கனவு கண்டது மட்டுமன்று; தன் கனவின்படி தன் வாழ்வையும் அமைத்துக்கொண்ட வர். இவ்வளவு உயர்ந்த லட்சியத்தை, கனவில் மட்டு மன்று, தன் வாழ்க்கையிலேயே மேற்கொண்டு ஒழுகிய பெருந்தகை ஒருவர், ஒரு காவியத்தை இயற்றினல், அதில் எத்தனை எத்தனை உயர்ந்த கொள்கைகள் பதிந்து கிடக்கும். மக்கள் எப்படி எப்படி வாழவேண்டுமென்றெல்லாம் அவர் கண்ட கனவுகள் அவர் காவியத்தில் இடம் பெருது வேறு எங்கு இடம் பெறுவன?

பொதுவாக எல்லா கவிஞர்களும் கனவு காண் பவர்கள். கனவு உலகத்தில் சஞ்சரிப்பவர்களே. உலகில் மனிதர்கள் காணும் கனவு வேறு; கவிஞர் கள் காணும் கனவோ வேறு. இயற்கையாக மனிதர் கள் தூங்கும்போது கனவு காண்பவர்கள். கவிஞர்

களோ தாங்கள் முற்றிலும் விழித்துக் கொண்டிருக்கும்போதும், தாங்கள் கவி இயற்றுவதிலும் எழுதுவதிலும் ஈடுபட்டிருக்கும்போதெல்லாம் கனவு காண்பார்கள். இத்தகைய கனவு இல்லையேல் அவர்கள் கவி, கவியாகாது, சிறப்பு பெறாது. இக்கனவு இல்லையேல் அவர்கள் நூல் எல்லாம் ஓர் செய்தித் தாளாக முடியும்; கவிஞர்கள் போற்றும் பாக்கள் அல்லது காவியங்கள் ஆகமாட்டா.

கவிஞர்களின் கற்பனைகளில் பெரும்பாலன கனவுலகத்தில் கண்டவைகளே என்றுகூடச் சொல்லலாம். கற்பனைகளில் இரண்டுவிதமுண்டு; ஒன்று உள்ளதை உள்ளபடியே காட்டும் உண்மை உவமைகளைக் கற்பித்தல். மற்றொன்று இல்லாப் பொருள்களை உவமை காட்டுதல் – இல்பொருள் உவமைகளைப் புனைந்து கூறுதல். இல்பொருள் உவமைகள் எல்லாம் கனவுலகத்தைச் சேர்ந்தவைகளே. தான் கூறும் இயற்கை அழகு எவ்வாறு இருந்தால் சிறந்ததாகும் என்று கவிஞன் கனவு காண்கிறான். அக்கனவு பாட்டாக வெளிவருகின்றது. இவ்வித கனவுகளும் இளங்கோவடிகளிடம் உண்டு.

கண்ணகியை மிக்க அழகுடையவளாகக் காட்டுகின்றார். அவள் உடலமைப்பையும் உடலின் உறுப்புகளையும் அழகு ததும்ப கோவலன் வாயிலாக வர்ணிக்கின்றார். கண்ணகியின் நெற்றி மிக மாட்சிமைப்பட்டது. இவள் நெற்றிக்கு எதனை உவமை கூறலாம். பொதுவாக புலவர்கள் பிறைமதியை மாதர்களின் நெற்றிக்கு உவமை கூறுவார்கள். தெய்வக் கற்புடைய கண்ணகிக்கு வெறும் பிறைமதி ஒப்பாகுமா ?

கற்புடைய மாதர் நெற்றியை, முகத்தைக் காண்போர்க்கு காம எண்ணங்கள் தோன்றுவதில்லை. அவர்கள் நெற்றியும் முகமும் தெய்வ ஒளி வீசும். காண்போரிடமும் அத்தெய்வத் தன்மையே பரவ, அச்சத்தோடுகூடிய அன்பும் அருமையும் தோன்றும். இதற்கு எதை உவமை கூறலாம். புராண உலகத்தின் வழியே கனவுலகத்தில் புகுந்தார் இளங்கோ. சிவபெருமான் அணிந்திருக்கின்ற குழவித்திங்களைக் கண்டார். அதற்கு இயற்கையான அழகுடனே சிவபெருமான் அதை அணிந்திருப்பதிலும் ஒரு அழகு. என்ன அழகு! பக்தியை எழுப்பும் அழகு! ஆ! இமையோர்கள் அத்திங்களை வணங்கி நிற்கின்றனர்—அருமை, அருமை—அழகு, அழகு—அன்பு ததும்புகின்றது. இவற்ருேடு கூடி தெய்வத்தன்மை ஒளிர்கின்றது. இவற்றை எல்லாம் ஒரு சேரக் காண்பது அருமையிலும் அருமை. சிவபிரான் இப்பிறை நமக்கு எதற்கு, மண்ணுலகத்தாரை வாழ்விக்க வல்லவா வேண்டும் என்று கருதினுர். இப்பிறையோடு பிறந்தவள் ஒரு தெய்வப்பெண், லெட்சுமி உண்டல்லவா, அவள் இப்போது கண்ணகியாக காவிரிப்பூம்பட்டினத்தில் தெய்வத் தன்மையோடு விளங்குகிருள். அவளுக்கு நீ நெற்றியாகுக என்று அப்பெரியோன், சிவபெருமான், அணிந்திருந்த குழவித்திங்களை கண்ணகிக்குக் கொடுத்து விடுவாராக என்று இளங்கோ வேண்டுகிருர்.

"குழவித்திங்கள் இமையவ ரேத்த
அழகொடு முடித்த அருமைத் தாயினும்
உரிதின் நின்னே டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் தருக திருநுதலா கென"

இது ஒரு வகைக் கனவு. தெய்வ ஒளி வீசும் அழகுக்கனவு. புராண உலகத்தில் புகுந்து கண்ட கனவு.

மற்ற கனவுகளும் உண்டு. உலகத்தை எவ்வாறு அரசர்கள் ஆளவேண்டு மென்று கனவு காணுதத் தமிழ்ப் புலவர்கள் இல்லை என்றே கூறலாம். இளங்கோவடிகள் இக்கனவில் மற்றவர்களுக்கு வழி காட்டியாக அமைகின்றார்.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப் பட்டபோது கோடைக்காலம். வெய்யிலோ பொறுக் கக்கூடியதாக இல்லை. கண்ணகி வழி நடந்தறி யாதவள். வழிச்செல் வருத்தத்தினால் மிக்கத் துன்ப மடைந்தாள். அவள் அடிகள் சிவந்தன. நடக்க முடியவில்லை. குறுகப் பலவாக மூச்சுவிட்டு வருந் தினாள். இத்துன்பமும் நோயும் தணியும் வண்ணம் பகற் பொழுதை ஐயை கோட்டத்தில் ஒரு பக்கத்தில் கழித்தனர். பகற் பொழுதில் வழி நடத்தலின் இரவில் நிலவெளிச்சத்தில் வழி நடத்தலே நல்ல தென்ற முடிவுக்கு வந்தனர். இரவில் கொடிய விலங்குகளால் தீங்கு நேருமே என்ற அச்சம் ஏற் பட்டது. இனி அவர்கள் செல்லவேண்டிய நாடு பாண்டியர் ஆளும் நாடு. அவர் ஆட்சி செங்கோல் ஆட்சி—அறம் திறம்பாத ஆட்சி—ஆதலின் அவர் நாட் டில் கரடிகள் துன்பம் செய்யா. புலியும் மானும் மாறுபடாது ஒன்றுபட்டு வாழ்வன. பாம்பும், பேய் களும், முதலையும், இடியும் வழிச்செல்வோருக்குத் துன்பம் செய்யா. இரவிடைச் செல்லுதலே நன்று என்று துணிந்தனர்.

"கடுங்கதிர் வேனிலிக் காரிகை பொருஅள்
படிந்தில சீறடி பரல் வெங் கானத்துக்
கோள்வல் உளியமுங் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கையும் மான் கணம் மாறலா
அரவுஞ் சூரும் இரை தேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் றென்னவர் காக்கும் நாடென"

என்று கூறுகிறார். உலகில் மனிதர்கள் ஒற்றுமையுடன் வாழ்வதே அரிதாகின்றது. ஒரு குலத்தார் மற்றொரு குலத்தாருடன் ஒத்துவாழ்தலோ அரிது. ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரோடு ஒத்துவாழ்தலோ அதனிலும் அரிது. இவை எல்லாம் அரிதாக இளங்கோவிற்குத் தோன்றவில்லை. அறிவுடைய மக்கள் ஒத்து வாழ்தல் வேண்டும். இது அவர்கள் இயல்பு; அவர்கள் கடமை. இவர்கள் வாழ்க்கை இப்படி அமையவேண்டும்; இவர்களை ஆளும் முறை இப்படி அமையவேண்டும் என்று கூறுவதெல்லாம் மிகையானது. விலங்கினங்களும் தம்முள் ஒத்து வாழவேண்டும். மக்கள் மட்டுமல்ல விலங்கினங்களும் ஒத்து வாழும் முறையில் அரசாட்சி அமைய வேண்டுமென்று கனவு கண்டார். இளங்கோ பாண்டியன் ஆட்சியில் வாள்வரி வேங்கையும் மான் கணம் மறலா. மாறுதலின்றி ஒத்து வாழ்ந்தன. மக்களுக்குக் கொடிய விலங்குகளும் துன்பம் செய்யவில்லை என்று துணிந்து கூறுகின்றார். இவருடைய கனவு மார்க்கஸ் அரில்யஸ், சர் தாமஸ்மோர், ப்ளேடோ முதலியோர் கண்ட கனவையும் தாண்டி அப்பால் சென்று விட்டது.

பாண்டியன் ஆட்சி முறைக் கனவிலும், நீதி செலுத்தும் உணர்வைக் குறித்த கனவு—அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம்—என்னும் கனவு பெரிது. அரசன் தீர விசாரணை செய்யாது பொற்கொல்லன் சொல்லை நம்பி கோவலனைக் கொன்றுவிடுமாறு உத்திரவிட்டான். கண்ணகி இதைக் குறித்து தன்முன் வழக்குரைத்து, தன்னிடமிருந்த மற்றொரு சிலம்பை உடைத்துக் காட்டிய போது, தான் செய்தது தவறு என்று உணர்ந்தான் பாண்டியன்.

"பொன் செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்"

என மன்னவன் மயங்கி வீழ்ந்தான். உயிர் துறந்தான். அவன் மனைவி கோப்பெருந்தேவியும் குலைந்தனள். நடுங்கி வீழ்ந்தாள், இறந்தாள். என்னே இவர்கள் தம் கடமையாற்றும் உணர்வின் திறம். அரசன் செய்வது ஒன்றும் தவறில்லை-கொடுந்தொழில் புரியினும் அது குற்றமில்லை. "The King does not wrong" என்று கருதும் கூட்டத்தாரும் உண்டு. தான் செய்தது தவறு என்று உணர்ந்து எந்த அரசனாவது உயிர் துறப்பானா? நினைத்த மட்டில் உயிர் துறக்கத் தான் முடியுமா? இப்படி எல்லாம் உண்மையில் நடந்ததோ இல்லையோ, நிச்சயமாக சொல்லுவதற்கில்லை. தற்கால உலகம் இதைக் கனவுலகத்தில் சேர்க்கும். இவ்வாறு நடந்திராவிட்டாலும்,

இவ்வாறு தன் கடமையை அரசன் உணர வேண்டும் என்று இளங்கோ கருதினர் என்று கொள்வதற்குத் தடை இருக்க முடியாது.

கடைசியாக, பெண்களின் கற்பு நிலையைப்பற்றி, இளங்கோ கண்ட கனவையும் கூறத்தகும். பெண்கள் கற்பு நிலையைப்பற்றி முதல் முதல் கனவு கண்டவர் திருவள்ளுவர். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்றது அவர் குறள். இத்தகைய மழை தரும் கற்புவாய்ந்த பெண்மக்கள் அக்காலத்து இருந் தார்களோ இல்லையோ சொல்லமுடியாது. இந் நிலைக்குப் பெண்கள் உயர வேண்டும் என்று தமிழ்ப் புலவர்கள் கனவு கண்டார்கள் என்று தடையின்றிக் கூறலாம். இவரைப் பின்பற்றியவர் இளங்கோ. கோவலன் தன் மனைவி கண்ணகியை மறந்து ஆடல் வல் மகள் மாதவியிடமே உறைவதானன். இப் பிரிவுத் துன்பத்தைக் கண்ணகி பொறுத்து ஆற்றி இருந்தாள். கண்ணகியின் பார்ப்பனத் தோழி, தேவந்தி, கண்ணகியின் குறை நீங்க, "சோம குண்டம், சூரியகுண்டம் என்னும் பொய்கையில் நீராடிக் காமவேள் கோட்டத்தைத் தொழுத மகளிர் இம்மையில் கணவருடன் கூடி இன்புறுவர்; நாமும் ஒரு நாள் நீராடுவோமாக" என்று கூறினுள். இதற்குக் கண்ணகி "இங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம் தொழுதல் எங்கட்கு இயல்பன்று" என்று கூறிமறுத்துவிட்டாள். அவள் கற்பின் திறம் அவள் கணவனை அன்றிரவே தன்னிடம் சேர்த்தது. இம் மட்டோடு நின்றிலர் இளங்கோ.

"கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங் கண்டிலமால்
வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிற் இருந்த நாடு".

என்றெல்லாம் கனவு கண்டார். இப்புலவர் கனவெல்லாம் நனவாகும் காலமும் உண்டாகலாம். இவ்வித கனவு காண்பதில் நம் நாட்டுப் புலவர்கள் மற்றைய நாட்டுப் புலவர்களுக்குப் பின்வாங்கியவர் அல்லர்.

கவிகள் கண்ட கனவு - - -

- - - திருவள்ளுவர்

[ச. சச்சிதானந்தம் பிள்ளை]

நன்மை பயக்கும் நிலைபேருன உண்மைகளை சிந்தைக்கும் செவிக்கும் இனிய தீஞ்சொற்களைக் கொண்டு, அழகுபெற யாத்துச் செய்யுளின் வாயிலாக உலகிற்களித்து மக்களை மேல் நெறியில் செலுத்துவோர் உயர்ந்த கவிகளாவர். மக்கள் சமுதாயத்தில் குணங்களும், குறைகளும் தத்தம் அளவில் மிகுந்தும், குறைந்தும் அவ்வப்போது காணப்படினும், அவ்விரு கூறுகளும் எப்போதும் இருந்தே வந்துள்ளன. கவிகள், மனித சமுதாயத்தில் காணும் குணங்களை மேலும் வளர்க்கவும், குறைகளை அடக்கவும் தொண்டாற்றிவந்துள்ளனர். தம்மனதைக்கவரலல்ல உயரிய குறிக்கோள் இல்லாவிடில் மக்கள் மக்களாய் வாழ முடியாது. ஆதலால் 'குறிக்கோளிலாது கெட்டேன்' என்று எவரும் வருந்தாவண்ணம், தக்க குறிக்கோளை உள்ளத்தைக் கவரும் வகையில் ஆன்ருேர் தந்துதவிச் சென்றுள்ளனர்.

இத்துணைச் சிறப்புடைய உத்தம கவிகளுள் திருவள்ளுவர் ஒருவர். இவர் உலக மகா கவிகளுள் ஒருவர் என அறிஞர்களால் அன்புடன் போற்றப் பெறுபவர். மக்கள் வையத்து வாழ்வாங்கு வாழும்

வகையை விவரமாகவும், திட்பமாகவும் எடுத்துரைப் பதில் இவர் நிகரற்றவர். இவர், புத்தர், ஜீனர், சோக்ரதர், அரிஸ்டாட்டில், மார்க்கஸ் ஆரிலியஸ், கிருஸ்து நாதர் முதலிய சான்றோர் கூட்டத்தில் வைத்து ஆன்றோர்களால் மதிக்கப்பெற்றவர். திருக் குறளைக் கற்ற மேனாட்டு நல்லறிஞர்கள் பலர் அந் நூலையும் அதன் ஆசிரியரையும் பெரிதும் பாராட்டி உள்ளனர்.

தமிழகத்தில் திருக்குறள் தோன்றிய காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்டது. அக் காலம் தொட்டே, இது தனிப்பெருஞ் சிறப்பு தரப் பெற்று வந்துள்ளது. திருவள்ளுவமாலை என்னும் நூல் முழுதும் இதன் புகழ் கூறும் பாமாலையேயாம். "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண் குற ளால், ஆனா அறமுதலா அந்நான்கும் ஏனோர்க்கு ஊழின் உரைத்தான்" என்றும், "என்றும் புலராது யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய்" என்றும், திருவள்ளுவரைப் பற்றியும், அவர் நூலைப்பற்றியும் கூறத்தொடங்கும் பாடல்கள் இதற்குப் போதிய சான்றாகும். இங்ஙனம் இந்நூல் என்றும் வாடாத கற்பகத்தின் தெய்வத் திருமலர்போல் கவினுற விளங்குவதன் காரணம், அது என்றும் மாறாத – அழியாத – உண்மைகளைப் பயனும், அழகும் பொருந்தக் கூறுவதேயாகும்.

வள்ளுவர் வாழ்ந்திருந்த கடைச்சங்க காலத்தில் மிகவும் பாராட்டத்தக்க பண்புகள் பல சமுதாயத் தின் பெரும் பகுதியில் விளங்கின. உதாரணமாக, தெய்வக்கொள்கை, வாய்மை, கற்பு, விருந்தோம்பல்,

ஈகை, தீவினையச்சம், வீரம், மானம், மெய்யுணர்வு, பெரும் புலமை முதலியவற்றைக் குறிக்கலாம். சிறு பகுதியினர், "நயமை" என்னும் அதிகாரத்தையும், இயற்றுமாறு வள்ளுவரைத் தூண்ட வல்லவர்களாயு மிருந்திருப்பர். இது உலக இயற்கையே.

ஆனால் வள்ளுவர் மக்கட்குலத்திற்கெல்லாம், சீர் சிறந்த குறிக்கோளை நினைப்பூட்ட வந்தவர். இவர் தரும் குறிக்கோள், மக்களைச் சிறந்த மக்களாக வாழச் செய்வது; வானுறையும் தெய்வமெனப் போற்று மாறு செய்வது; அறம் பொருள் இன்பத்தை முறை யாய் அடையும்படி ஊக்குவது; மக்களை ஒழுக்கத் தால் விழுப்பமெய்திய சான்றோராக்குவது; முடிவாக அவர்களை அறவோறும் துறவோருமாகிய அந்தண ராக்குவது.

இக்குறிக்கோளின் மூலம், முதற் குறளிலேயே குறிக்கப் பெற்றுள்ளது. அகர எழுத்து, தன் தனித் தன்மையை அழித்துக் கொள்ளாது. பிற எழுத்துக் களை எல்லாம் தோற்றுவித்தும், அவற்றுள் நின்று இயக்குவித்தும் உதவுவதுபோல், உலக காரண மாயும், உலகத்தின் வேறாயும், உடனாயும் நின்று, அதை ஒரு குறிக்கோளை நோக்கிச் செலுத்திக் கொண்டும் வருவதாகிய ஒரு தனிமுதற் பரம்பொருள் உண்டென்று வள்ளுவர் கட்டுரைக்கின்றார். அதற்கு எட்டு குணங்கள் உளவென்று நமக்கு ஓரளவு எட்டுமாறு முதல் எட்டுக் குறள்களால் விவரிக் கின்றார். ஒன்பதாவது குறளில் "என் குணத்தான்" என்றும் தொகுத்துச் சுட்டுகின்றார். அகரத்தில் தொடங்கும் முதற்குறள் "பெறின்" என்னும்

இறுதிக்குறளின் இறுதி எழுத்தாகிய னகரத்தில் முடி வெய்துகிறது. இருள்சேர் இருவினையுடைய உயிர் களெல்லாம் தத்தம் சிவயாத்திரை முடிவில் அவ் விறைவனோடு ஒன்றாகக் கலந்து விடுவதையே வாழ்க் கைக் குறிக்கோளின் சிகரமாக வள்ளுவர் சூசிப்பிக் கின்றார்.

உயிர்த் திரளாகிய சித்துப் பிரபஞ்சமும், சடப் பொருளாலாகிய அசித்துப் பிரபஞ்சமும், ஆதிபக வனைத் தமக்குத் தலைவனாகக் கொண்டுள்ளவை. ஆத லால் உயிர்கள் அவன் வகுத்த முறைப்படியே இயங் கும் தகுதியுடையவை; இறைவன் அமைத்துள்ள நியதிக்குட்பட்டு ஒத்து இயங்க வேண்டியவை. ஆன் மாக்களின் தேவைக்கேற்ப அவன் பல பிறவிகளைத் தந்து—காத்து—அவற்றை முன்னேற்றி வருகின்றான். அவைகட்கு அஃறிணைப் பிறவிகளிலெல்லாமும் படி முறையே அறிவிச்சை செயல்கள் வளர்ந்து வருகின் றன. அப்பால் உயர்திணைப் பிறவி கிடைக்கின்றது. இந்த அளவிற்கு உயர்ந்த பின்பு, ஆறும் அறிவு தொழிற் படலாகின்றது. நாம் ஏதும் அறியாமே நம்முள் ஆண்டவன் வந்து நல்லனவும், தீயனவும் காட்டா நிற்கின்றான். இப்பண்புடன் மக்கள் அற நெறியில் தலைப்படுகின்றனர். இந்த அறத்தின் உண்மைச் சொரூபம் "மனதின் கண் மாசிலனாதல்" என்று வள்ளுவர் அறிவுறுத்துகின்றார். அறத்தின் முதற்படி இல்லற மென்றும், அதன் முதிர்ச்சியில் காணும் இரண்டாம்படி துறவறம் என்றும் அமைத் துக் காட்டுகிறார். திருக்குறளில் இல்லறம் எனும் இயல், "இல்வாழ்க்கை" முதலாக, "புகழ்" ஈறாக

உள்ள 20-அதிகாரங்களில் இனிது விளக்கப் பெற்றுள்ளது.

இல்வாழ்க்கையின் புனிதமும், மாண்பும் அதற்குத் துணையாகிய இல்லாளது நன்மையும், கற்பின் பெருமையும், இவ்விருவரும் தம் இல்லறத்தை நடத்துங்கால் செய்யவேண்டிய கடமைகளின் விவரமும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. இல்வாழ்க்கையின் பண்பு – அன்பு – அதன் பயன் அறம் என்று திட்டமாகத் தெரிவிக்கின்றார். இவ்விரண்டின் பயனாக நம் மக்கட்பேறு, விருந்தோம்பல், இனியவை கூறல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அழுக்காறு கொள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, தீவினையச்சம், ஒப்புறவறிதல், ஈகை என்னும் பண்புகள் வளர்ந்து வருகின்றன. நாயனார், ஆண்மகன் பிறன்மனை நயத்தல், வேசையர் நட்புக்கோடல், என்னும் பாவங்களைச் செய்யாது தன் மனைவிக்கு உண்மையாய் நடக்கவேண்டுமென்றும் விதிக்கின்றார். நல்ல இல்வாழ்வினைப் புகழ் தானாக நாடி வருகின்றது. இல்லறம் செவ்வையாக நடக்கும்போது, அன்புடைமை அருளுடைமையாகப் பரிணமிப்பதற்கு ஆயத்தம் பண்ணுவதை உற்றுநோக்கின் உணரலாம். புலனடக்கமும் தெய்வநாட்டமும், துறவில் விருப்பமும் இங்ஙனமே வளர்ந்து வருவதும் புலப்படும்.

இல்லறம் பழுத்துத் துறவறமாகி வளர்வதை திருவள்ளுவர் 13-அதிகாரங்களில் விளக்குகின்றார். இவை கூறும் தகுதிகள் 'வாதம்,' 'ஞானம்' என்னும் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன. இவற்றுள்

முதலாவதாக நிற்பது அருளுடைமை. இது குடும்பத்தார், சுற்றத்தோர், உறவோர், என்னும் தொடர்பு பற்ருது, இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை, இல்லறத்தாற்கு அன்புடைமை போல், துறவறத்திற்கு அருளுடைமை சிறந்தது. இதன் அடிப்படை 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமந்திரப் பொருப்புணர்ச்சியாகும். 'அருளுடைமைக்கு அடுத்துப்' 'புலான் மறுத்தல்' வருகின்றது. "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள்" என்று கேட்கின்ருர். 'அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்துண்ணுமை நன்று'என்கின்ருர். பின்பு தான் தவமேற்கும் தகுதி வரும். அப்பால், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னுசெய்யாமை, கொல்லாமை முதலிய பண்புகள் வளரும். பிற உயிர்கட்கு இன்னுசெய்தலை வள்ளுவர், இயற்கை நியதியிலுள்ள காரணங் காட்டிக் கண்டிக்கின்ருர். 'பிறர்க்கின்னு முற்பகல் செய்யில், தமக்கின்னு பிற்பகல் தானே வரும்!', "நோயெல்லாம் நோய்செய்தார் மேலாவாம்' என்று எச்சரிக்கின்ருர். அறிவுபடைத்தவர்கள் என்று தம்மை நினைத்துக்கொள்வாரை நோக்கி, "அறிவினுன் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன்நோய்போற் போற்ருக்கடை" என்று ஆணித்தரமாய் வினவுகின்ருர். அறத்துப்பாலில் விளக்கப் பெற்றுள்ள அறங்கள் யாவற்றுள்ளும் சத்தியமும், அகிம்சையும் அடிப்படை அறங்களாக அமைந்து உள்ளன. 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று' என்று சத்தியத்தின் மேம்பாட்டைக் கூறியவர் பின்பு

'ஒன்ருக நல்லது கொல்லாமை, மன்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று'' என்று கூறி அகிம்சைக்கு முதலிடமும், வாய்மைக்கு அடுத்த இடமும் தருகின்ருர். எனவே, சத்தியமும் தருமமும் தான் மக்கள் வாழ்க்கைப்புகைவண்டி, சுகமே ஓடுவதற்கு அமைந்துள்ள இரு தண்டவாளங்கள் போன்றுள்ளன. இந்நெறி நில்லாத மக்கள் சிலரோ பலரோ எக்காலத்தும் இருப்பினும் இதன் அவசியத்தை வள்ளுவர் என்றும் வற்புறுத்த விரும்புகின்ருர்.

ஞானம் என்னும் பிரிவில் நிலேயாமை, துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்னும் அரும்பெரும் அதிகாரங்கள் காணவுள்ளன. மெய்த்துறவிகளாகிய அறவோர்கள் பற்றற்ருன் பற்றிகளேயே பற்றி சிறப்பெனும் செம்பொருள் காண்பவர்கள்: அவர்கட்கு அவா அற்றுவிட்டமையால், இன்பம் இடையருது ஈண்டும் அவர்கள் அத்தகைய கவியாய் உலகிற்கு வழிகாட்டி அருளுவர்.

அறத்துப்பாலின் கடைசி அதிகாரம் 'ஊழ்' என்பது. அதை அடுத்துப் 'பொருட்பால்' தொடங்குகிறது. இவ்வதிகாரத்தின் வைப்பு முறையும் கவனிக்கத்தக்கது. இம்மையில் ஒருவன் அடையும் இன்ப துன்பங்களுக்குக் காரணம், அவனது முன்விஃனப் பயனும், இப்போது செய்யும் முயற்சியும் ஆகும்: ஆயினும், அறத்தைச் செய்வதற்கு, முயற்சி சிறந்த கருவி என்றும், பொருளே அடைந்து இன்பத்தை அனுபவித்தற்கு 'ஊழ்' என்னும் முன்விஃனயே காரணம் என்றும் காட்டுதற்குப் போலும் ஊழ் என்ற அதிகாரத்தை அறத்துப்பாலுக்கும், பொருட்பாலுக்கும் இடையே வைத்தார் வள்ளுவனுர்.

இனி பொருட்பாலைப் பற்றி ஒரு சிறிது கவனிக்கலாம்: இது, அரசியல், அரசியல் அமைப்பியல், ஒழிபியல் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. மொத்தம் எழுபது அதிகாரங்களால் நிறைந்தது. இதுவும் தனிச்சிறப்புடைய ஒரு பகுதி. அரசியலார் சிறந்த அனுபவம் பெற்றிருந்தாலன்றி, ஒருவரை இவ்வாறு திட்ப நுட்பம் பொருந்த அரசியலைப்பற்றி எழுதுதல் இயலாதென்பது அறிஞர் கருத்து. இருபத்தைந்து அதிகாரங்களில் விரித்துக் கூறப்பெறும் அரசியல், முக்கால மன்னர் ஆட்சியைக் குறிப்பது. எனினும், இக்கால ஜன நாயக ஆட்சியை மக்களின் பிரதிநிதிகளாக நின்று நடத்தும் பெரும் குழுவினர்களும், அரசற்கும், அமைச்சர்க்கும் உரிய என்று வள்ளுவர் விளக்கும் தகுதிகளில் பொருந்துவனவற்றை எல்லாம் தாமும் பெற்றிருத்தல் செங்கோல் ஆட்சிக்கு அவசியம் ஆகும். கல்விகேள்வி, நற்குண நற்செய்கை, அறிவுடைமை, குற்றங்கழிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, செங்கோன்மை, ஆட்சித்திறமை, ஊக்கமுடைமை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை என்னும் அரசியல் அதிகாரங்கள் கூறும், தகுதிகள் சிறப்புவகையால் போற்றி ஏற்கத்தகுந்தவை. அங்ஙனமே பத்து அதிகாரங்களில் அமைச்சருக்குக் கூறப்பட்டுள்ள அவசியமான தகுதிகளாகிய வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைச்செயல்வகை, குறிப்பறிதல், அவையறிதல், முதலியனவும் வேண்டத்தக்கவையாகும்.

இவ்வாறு அரசரும் அமைச்சரும் கூடித் தம் நாட்டை நாடாக்கவேண்டும் என்ற நாட்டத்துடன்

ஆளுதல் கடன். நல்ல நாட்டின் இலக்கணங்களைப் பற்றி வள்ளுவர் கூறியிருப்பவை பெரிதும் கவனிக்கத் தக்கதாகும். "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ் விலாச் செல்வரும் சேர்வது நாடு" என்பது 'நாடு' என்னும் அதிகாரத்தில் முதற்குறளாகவே அமைந் துள்ளது. "உறு பசியும் ஓவாப் பிணியும், செறு பகையும், சேராதியல்வது நாடு" என்னும் குறளும், "பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும், வேந் தலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு" என்னும் குறளும் நம் நாட்டின் தற்கால நிலைமையை நினை வூட்டுகின்றன. "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளந்தரும் நாடு" என்பது 20-ம் நூற்றுண்டில் எம்மட்டில் நடைமுறைக்குக்கொண்டுவரக் கூடியது என்பது தனியே ஆராய்தற்கு உரியது. நட்பு என்பது, படைபோல் அரசனுக்குத் தொழிலளித்து உதவுவது. இதன் உடன்பாட்டால் ஐந்து அதிகாரங் களாலும், எதிர்மறையால் 12-அதிகாரங்களாலும் விவரிக்கின்றுர் ஆசிரியர். இவைகளும் "உய்த்துணரத் தக்கவையே!"

இனி, தொழிலியலில் 13-அதிகாரங்கள் உள் ளன. இவ்வியல் செங்கோலாட்சியின் சீரிய பயன், மக்களைச் சான்றோராக்குதல் என்று வலியுறுத்து வதாகக் காண்கின்றது. உலகில் எம்முறையில் ஆட்சி நடப்பினும் வள்ளுவர் இங்கே வியந்துகூறும் குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை, குடிசெயல் வகை என்னும் பண்பு கள் வீட்டிலும், பள்ளிகளிலும், சமுதாயத்திலும், அரசாங்கத்திலும், பேணி வளர்க்கத் தக்க தகுதி

களாகும். மற்ருென்று இவ்வியலின் சிறப்பாகக் கவனிக்கத் தக்கது, உழவு என்னும் அதிகாரம். வியவசாயத்தின் அவசியத்தை உலகின் பலநாடுகளும் இக்காலத்தில் உணர்ந்து ஆக்கவேலைகள் பலசெய்யத் தொடங்கி உள்ளன. திருவள்ளுவர், 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனுல் உழன்றும் உழவே தலை'' என்பது முதலிய பாக்களால் உழவின் முக்கியத்தை வற்புறுத்தியுள்ளார்.

பொருட்பாலின் முடிவில் கயமை என்னும் அதிகாரத்தை தெய்வப்புலமை ஏன் வைத்தார் என்பதும் உற்றுணரத்தக்கதே. சான்ருண்மை (= பல குணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளும் தன்மை) பண்புடைமை (பெருமை சான்ருண்மைகளால் தாம் வழுவாது நன்றே எல்லார் இயல்புகளும் அறிந்து அவற்றிற்கு ஒத்து நடத்தல்) என்னும் சீரிய நன்மைகளை முன்னம் விரிக்கின்ருர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை ஆகிய ஐந்தும், சான்ருண்மை என்னும் பாரத்தைத் தாங்கிய ஐந்து தூண்களாகும் என்று கூறுகின்ருர். மனிதப் பண்புடையவன் யாவன் என்னும் விஞவுக்கு, 'சான்ருண்மையும் பண்புடைமையும் பொருந்தியவன்' என்று சுருக்கமாக விடைதரலாம். ஒரு நாட்டின் மக்களை இவ்வாறு மக்களில் சிறந்த மக்களாய்—சான்ருண்மையும், பண்புடைமையும், ... உள்ளவர்களாக உயர்த்துதல் செங்கோல் ஆட்சியின் விழுமிய பயனுகும். இவருள் தலையாயர் சிலர். அறவோராய் துறவு நிலை நின்று அருள் தொண்டாற்றுவர். குறிக்கோள் இங்ஙனம் இருப்பவும், பொருட்பாலின்

கடைசி அதிகாரத்தில் 'கயமை' என்பதை வைத்ததின் கருத்து என்னையோ என்னில் மக்களுள் கடையா யோர் சிலர் நாட்டில் எவ்வளவு சிறந்த அரசாட்சி நடப்பினும் மக்களின் பலர் நன்னெறி நடப்பவராய் இருப்பினும்–தம் ஆன்ம பக்குவக் குறைவு காரண மாக–வெகு கீழான அறிவும், உயர்வும், நடத்தையும் உடையாராய் இருப்பர் என்று எச்சரித்தல் பொருட் டே என்னலாம். அவர்களை எப்படி நடத்தவேண்டு மென்பதை இவ்வதிகாரம் கூறுகின்றது. அவர்களை யும் நல்ல சூழ்நிலையில் வைத்து நல்லோர்களாக்க முயலவேண்டும் என்பதே ஆன்றோர் விருப்பம். எனவே, வள்ளுவர் கண்ட கனவு மக்கள் அனைவரை யும் சான்றோர்களாக உயர்த்திப் பின்பு செம்பொருள் காட்சிபெறும் ஞானிகளாய் ஆக்கவேண்டும் என் பது தான். ஆயினும் இயற்கையில் அமைந்துள்ள தெய்வ ஆட்சி முறையின் அமைப்புகளையும் காண் கின்றார். ஒருவன் வாழ்வில் இன்று காணும் குறை கள் யாவும் சின்னாளிலோ, பன்னாள் கழித்தோ, நீங்க வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம். ஆதலால் வள்ளுவர் அறிவுறுத்தியபடி உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளுதலைக் கைவிடலாகாது.

கடைசியாகக் காமத்துப்பால், உத்தம தலைமக னும், உத்தம தலைமகளும், உத்தம காதலராய் ஒன்று பட்டு இல்லறம் மேற்கொண்டு அறஞ்சார் தூய இன்பம் நுகர்தலின் நுண்ணிய மனப்பாங்குகளை அழகுற–நாகரிகமாக–எடுத்துரைக்கும் 25 அதிகாரங் களை உடையது. பண்டைய தமிழக வாழ்க்கையை ஒட்டிய 'களவியல்' 'கற்பியல்' எனும் இரு பிரிவுகளை

உடையது. பரத்தையல் பிரிவென்னும் செய்தி இப் பாலில் இடம் பெருமை பாராட்டத்தக்கது. இப் பகுதி, வெகு நுட்பமாக விளக்கும் பண்புகள் பல இல்லங்களில் இல்லாதவைதான். ஆனால் விழுமிய இக் குறிக்கோளை-சீரியதோர் கனவை-இல்வாழ்வார்க்குத் தருகின்றார் ஆசிரியர் இப்பாலால். ஆண்டவனிடம் ஆன்மா கொள்ளும் அன்பின் முதிர்ச்சியேயாய், அது நாயக நாயகி முறையில் அவனுடன் ஒன்றுபட்டு பெறும் பேரின்பப் பெருவாழ்வை உள்ளுரைப் பொருளாகக் கொண்டது என்றும் சில அறிஞர் கூறுவர். இது எப்படி இருப்பினும் இங்கே உலகப் பெரும் புலவராகிய திருவள்ளுவ தேவர் இல்வாழ்வோர் நெஞ்சிலெழுப்பும் கனவும் நல்லதன்றோ.

இங்ஙனமெல்லாம் திருக்குறள் ஆசிரியப் பெருந்தகை கண்ட கனவு, உலகியலையும், ஆண்டவன் ஆட்சியின் பண்பினையும் நன்குணர்ந்த இஞ்ஞாலத்தின் அடிப்படையில் எழுந்த தொன்றெனவே, போற்றியதனைப் பயன்படப் பாராட்டுவோமாக. ●

கவிகள் கண்ட கனவு - - -

- - - திருத்தக்க தேவர்

[அ. ச. ஞானசம்பந்தம்]

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எத்தனையோ கவிஞர்கள் அழியாக் கவிதை எழுதியுள்ளார்கள்; ஆம்! கனவு கண்டுதான். அவருள் ஒருவர் திருத்தக்க தேவர். பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இக் கவிஞர் பிரான் என்றும் வாழும் சாவாக் கவிதை எழுதியுள்ளார். அந்நூலின் பெயர் 'சிந்தாமணி' என்பதாகும். கவிச்சக்ரவர்த்தி கம்பனுக்கும் வழிகாட்டியாக இருந்த பெருமையுடையவர் திருத்தக்க தேவர். அவர் காலம்வரை பெருங்காப்பியங்கள் ஆசிரியப் பாவாலேயே ஆக்கப் பெற்றிருந்தன. ஆனால் கனவு காண்பதிற் சிறந்த திருத்தக்க தேவர் ஏழாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் தோன்றிய விருத்தப் பாவால் காப்பியம் அமைக்க முடியும் என்ற பேருண்மையை நிலை நாட்டினார். இவற்றில் எல்லாம் புதுமுறை கண்ட தேவர் தமது நூலிலும் கனவிற்கண்ட ஒரு நாட்டைப் படைக்கிறார்.

அறிவும் திருவும்

சீவகன் தோன்றும் பெருமையுடையது ஏமாங்கத நாடு. ஒரு நாட்டுக்குப் பெருமை கூறுவதானால்

செல்வத்திற் சிறந்த நாடு என்றும், மாட மாளிகையும் கூட கோபுரங்களும் நிறைந்திருந்தன என்றுங் கூறுதல் மரபு. ஆனால் தேவர் கண்ட கனவு நாட்டிற்கு வெறும் செல்வம் மட்டிலும் இருந்து பயனில்லை என்று நினைத்தார். கல்விச்செல்வம் இல்லாவிட்டால் ஏனைய செல்வங்கள் இருந்தும் பயனில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையர் அன்றோ?' ஆதலின் நாட்டின் நிலைமை கூறும் முதற் பாட்டிலேயே, முதல் அடியிலேயே, தேவர் சிறந்த ஒரு கருத்தை வைத்துப் பேசத்தொடங்குகிறார். நாட்டு மாந்தர் நன்கு வாழத் தேவையாய் உள்ளன யாவை? அறிவு முதற்கண் வேண்டும். அடுத்தபடியாகச் செல்வம் வேண்டும். அறிவில்லாதவன் செல்வம், அறிஞனின் வறுமையைக் காட்டிலும் துன்பந்தரும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறிப் போனாரன்றோ? 'நல்லார்கட்பட்ட வறுமையின் இன்னாதே கல்லார்கட்பட்ட திரு' என்ற குறளை மனத்தில் வாங்கிக் கொண்ட தேவர் தாம் கூறும் நாட்டில் எதுமிக இன்றியமையாதது என ஆய்ந்து அறிவு முக்கியம் என்பதைக் கண்டு கூறுகிறார். அறிவை யடுத்து வேண்டப்படுவது செல்வம். எத்துணை அறிவையும் வறுமை கொன்று விடுமாதலின் அறிவு நல்லமுறையில் தொழிற்பட வேண்டுமாயின் செல்வமும் அறிவுடன் இருக்க வேண்டும் என்று கண்டார். இவை இரண்டும் இருந்தால் கூட ஒரு மனிதன் முழுத்தன்மையை அடைந்துவிட்டான் என்று கூறல் இயலாது. அவ்வறிவின் உதவியால் செல்வத்தை அநுபவிக்கத் தெரியவேண்டும். அல்வாறு செய்வதே ஒரு கலை. கலை என்பது வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE 102817

பகுதி. கலையில் ஈடுபட ஒருவன் பழகிக் கொண்ட பொழுதுதான் முழுத்தன்மையடைகிருன். வெறும் அறிவுச்செல்வம் மட்டும் உடையவன் முழு வாழ்க்கையைப் பெறமுடியாது. இம் மூன்றும் கலந்த வாழ்க்கையே முழு வாழ்க்கை. ஏமாங்கத நாட்டு மக்களும், மன்னனும் இம் மூன்றும் பெற்றிருந்தனர் எனத் தேவர் குறிக்கிருர்.

'நாவீற்று இருந்த
  புலமாமகளோடு நன்பொன்
பூவீற்று இருந்த
  திருமாமகள் புல்லநாளும்
பாவீற்று இருந்த கலைப்பாரறச்
  சென்ற கேள்விக்
கோவீற்று இருந்த
  குடிநாட்டணி கூறல்உற்றேன்'

என்று அவர்கூறும் பொழுது சாதாரணமாக நாம் அன்ருடம் காணும் நாட்டை அவர் கூறவில்லை என்றும் ஒரு கனவு நாட்டைக் கூறத் தொடங்குகிருர் என்றும் அறிய முடிகிறது.

இயற்கை வளம்

இனி இந்நாட்டின் இயற்கைவளம் கூறத் தொடங்கிய ஆசிரியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நானில வளமும் செறிந்துள்ளமையை ஒரே பாடலில் அழகாகக் குறிக்கிருர்.

உயர்ந்த தென்னையில் பழுத்த தென்னை நெற்று உதிர்கிறது; ஆனல் அதனையடுத்து மிக்க உயரமாக வளர்ந்துள்ள கமுக மரத்தின்மேல் விழுகிறது.

அடுத்து இருக்கும் தேன் பொந்தில்பட்டு பலாமரத்தின் பழுத்து நிற்கும் ஒரு பழத்தினைச் சாடி இன்னும் கீழே யிருக்கும் மாமரத்தில் உள்ள கனிகளை உதிர்த்துவிட்டு இறுதியாகத் தரையில் விழுமுன்னர் வாழை மரத்தில் உள்ள வாழைக் குலைகளையும் சிந்திவிட்டுத் தரையில் விழுகிறதாம். இக்காட்சியில் யாருக்காவது சந்தேகம் ஏற்படுமேயானல் பக்கத்திலேயே இருக்கும் இலங்கைத் தீவுக்கு ஒருமுறை சென்று வந்தால் இக்கவிதை எவ்வளவு மெய்மையானது என்பது விளங்கும்.

இன்னும் ஏமாங்கத நாட்டில் நீர்வளம்பற்றிப் பேசுகிறுர் ஆசிரியர். "மேகங்கள் கடலில் மேய்ந்து, சிவபெருமான் சடைபோல் மின்னி, வெள்ளித் தாரைகள் போல் மழைபொழி" கின்றதாம். இதனுலாய நீர்ப்பெருக்கம் 'மலையிடத்துண்டான செல்வங்களை எல்லாம் அடித்துக் கொண்டு வந்து வள்ளல்கள்' போல் பள்ளத்தாக்கில் உள்ளவர்கட்குத் தருகிறதாம். உணவு வளம் பேச வந்த ஆசிரியர் 'செந்நெல் குப்பைகள் கோடுயர் செம்பொன்னின் குன்றம் ஒத்தவே' என்று கூறிவிட்டு வாணிக நிலையைப்பற்றியும் பேசுகிறுர்.

வியாபாரம் மிகுதியும் நடைபெற்று வந்ததாம் ஏமாங்கத நாட்டில். நெல், கரும்பு, பாக்கு, வெற்றிலை, கடல் வளமாகிய உப்பு, மீன் முதலியவற்றையும் ஏற்றிக் கொண்ட வண்டிகள் "திருந்தி எத்திசைகளும் செறிந்த" என்று கூறுகிறுர். ஆதலின் கனத்த வாணிகமும் அந்நாட்டில் நடைபெற்றமை அறிகிறேம். இங்குக் கூறிய அனைத்துப் பொருள்கள்

செல்வது ஒரு வியப்பன்று. ஆனால் 'மணநிலை மலர் பெய்து மறுகும் பண்டி' யையும் ஆசிரியர் கூறுகிறார். மணம் மாறாத மலர்களை வண்டியில் ஏற்றிச்சென்றார் கள் என்கிறபொழுது அந்நாட்டு மக்களின் 'முருகியல் சுவை' (Aesthetic taste) எவ்வாறு இருந்திருக்கும் என்றும் நினைய வேண்டி உளது.

இவ்வளவு அருமையான நாட்டைப் படைத்த ஆசிரியர் அந்நாட்டு மக்களையும் படைக்கிறார். 'சோம்பி இருப்பவன் மனம் சாத்தான் குடி இருக்கும் வீடு' என்பது மேனாட்டார் கூறும் பழமொழி. தீர்க்க தரிசியாகிய கவிஞன்தான் நாட்டு மக்களை பெரிய உழைப்பாளிகள் என்று கூறுகிறான். உழைப்பாளி கள் என்று நாம் கூறுவதுபோலக் கூறுவது கவிஞ னுக்கு அழகன்று. எனவே அவர்கள் உழைப்புக்கு ஒரு எல்லை காட்டுகிறான். இதுவரை அவன் கூறிய பாடல்களால் நாட்டின் இயற்கை வளம், நீர்வளம், நிலவளம் முதலியவற்றைக் கண்டவுடன், எவ்வித முயற்சியும் இல்லாமலே இந்நாட்டு மக்கள் இப்பயனை அடைந்து விட்டார்கள் போல் இருக்கிறது என்று நம்மில் யாரேனும் நினைத்து விடுவோம் அல்லவா? அதனை மறுத்து மக்கள் உழைப்பின் எல்லையைக் கூற வந்த கவிஞன் தனக்கே உரிய முறையில் 'மீன்கணின் அளவும் வெற்றிடங்களின்மையால்' என்றான். மீனினுடைய கண் எவ்வளவு சிறியது; அந்த அளவு நிலங்கூடப் பண்படுத்தப் படாத தரிசு கிடையாது என்றால் அம்மக்கள் உழைப்பை என் னென்று கூறுவது? ஒரு நாட்டில் பண்படுத்தப் பெறாத தரிசு நிலம் இருக்கிறது என்றால் அதற்கு

இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று நீர்வளம் இல்லாமல் இருப்பது; அது இருந்தும் மக்கள் உழைப் பில்லாமல் இருப்பது, ஏமாங்கத நாட்டில் நீர்வளம் மிகுதி என்று ஆசிரியர் கூறி விட்டமையின் இப் பொழுது மீன்கண் அளவு இடம் கூட வெற்றிடம் இல்லை என்றால் அதனால் அவர்கள் உழைப்பை அறிவித்தவாறு ஆயிற்று.

நல்லற மாந்தர்

இவ்வளவு உழைத்துப் பொருள் தேடும் அம் மக்கள் எவ்வாறு அப்பொருளைச் செலவு செய்கிறார் கள் என்று தெரிய வேண்டாமா? பொருளைச்சேகரிப் பது யாவருஞ் செய்யக் கூடிய எளிய செயலாகும். ஆனால் சேர்த்த பொருளைத் தமக்கும் பிறருக்கும் நற் பயன் விளையுமாறு செலவு செய்தல் யாவரும் செய்யக் கூடியதன்று. ஏமாங்கத நாட்டார் செலவு செய்யும் வகையைத் தேவர் குறிக்கிறார். 'அடிசில் வைகல் ஆயிரம், அறப்புறமும் ஆயிரம்' என்ற அடியால் அறச்சாலைகளும் அடிசில் ஆக்கி யாவர்க்கும் வழங்கு கிற சாலைகளும் ஆயிரக்கணக்கில் இருந்தன என்று குறிக்கிறார். கரிகால் வெருவளத்தான் என்ற சோழன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி ஒரு புலவர் கூறிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன. அறச்சாலைகளில் 'சோறு ஆக்கிய கொழுங்கஞ்சி ஆறு போலப் பரந்து ஒழுகிற்று' என்றார் அப்புலவர். அந் நிலையில் நாடு இருக்க வேண்டும் என்று கருதிய திருத்தக்க தேவரும் ஆயிரக்கணக்கான வகைகளில் அடிசில் ஆக்கும் சாலைகளும் ஆயிரக் கணக்கில் இருந்தன என்கிறார். இத்தகைய அறச்சாலைகள்

இருந்தன் என்றால் இவற்றை மக்கள் தாமே வைத்துத் தாங்கி இருத்தல் வேண்டும்? எனவே அவர்கள் சம்பாதித்த பொருள்கள் தக்க வழியில் செலவு ஆயிற்று என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டன்றோ? இவ்வாறு அறஞ் செய்கின்ற மக்கள் நிறைந்திருந்தமையின், உலகில் தவஞ் செய்ய விரும்புபவர்களும் கூடக் காடு தேடிச் செல்லாமல் இந்நாட்டில் தங்கி தவஞ் செய்தனர் என்ற கருத்துப்படத் தேவர் 'நற்றவஞ் செய்வார்க்கிடம், தவஞ் செய்வார்க்கும் அஃதிடம்', என்று கூறினர். எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டித் தவம் மேற்கொள்கிறவர்களுங்கூட அந்நாட்டில் தங்கித் தவஞ் செய்வதால் தவறு இல்லை என நினைப்பார்களாயின் அந்நாட்டில் வாழும் மக்களுக்கு அதனைவிடச் சிறந்த சிறப்பு ஒன்றைக் கூற முடியாது.

அரசு நெறி

இனித் தேவர் கண்ட கனவு நாட்டின் அரசியல் பற்றி ஒரு சிறிது காணல் வேண்டும். ஏமாங்கத நாட்டை ஆட்சி செய்பவன் சச்சந்தன் என்னும் அரசன். பரம்பரையாக அரசுகட்டிலுக்கு உரிமையுடையவன்தான். என்றாலும் தான் அரசனாக இருக்கின்ற காரணத்தால் ஏனைய மக்களை ஆட்டுமந்தை என்று நினைப்பவன் அல்லன் அவன். தேவர் காப்பியஞ் செய்தகாலத்தில் முடியாட்சிதான் இங்கு நிலைத்திருந்தது. ஆனால் மன்னன் மக்களுக்காகத் தான் அரசாள்வதாக கருதி ஆட்சிசெய்தான். 'யான் உயிர் என்பது அறிகை வேல்மிகுதானை வேந்தர்க்குக் கடனே' என்ற கருத்தை நன்கு அறிந்திருந்த இம்மன்னன் உலகைக்

காக்கும் உயிராக யான் இருக்கிறேன் என்றே ஆட்சி செலுத்தினன். ஆட்சிசெய்யும் மன்னர்கள் இத்தகைய மனநிலைஉடையவர்களாக இருத்தல் வேண்டும்என்று தமிழ்ப் புலவர்கள் என்றுமே கூறிவந்துள்ளனர். எனவே மன்னனுக்கு வேண்டும் என்று கருதப்பெற்ற சிறந்த பண்பாட்டை எல்லாம் தாங்கள் கூறும் மன்னனுக்கு ஏற்றியே ஒவ்வொரு புலவரும் பாடிப் போயினர். திருத்தக்க தேவரும் இவ்விதிக்கு விலக்கன்று. சச்சந்தன் என்ற இம்மன்னன் வண்கையால் 'கலிமாற்றினன்' என்கிறார். எனவே கலிகாலம் என்றால் வறுமை மிகுந்து மக்களுள் உடையவர், இல்லாதவர் என்ற வேறுபாடுமிகுந்து விட்ட காலம் என்பதே பொருள்போலும். ஆதலின் இம்மன்னன் தனது மிகுந்த வள்ளன்மையால் கலியின் கொடுமையை இல்லாது செய்தான் என்கிறார். மேலும் உயிர்கட்குக் கருணை செய்தலின் அறக்கடவுள் போல் இருந்தான் என்கிறார். அரசனாக இருப்பவன் கருணை செய்வதில் வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு பாராட்டுவானேயாயின் நாடு பாழாகி விடும் அல்லவா? அதற்காகவே தேவர் தனது கனவு நாட்டில் ஆட்சிசெய்யும் அரசன் கண்ணோட்டம் என்று கூறப்பெறும் கருணை காட்டும்பொழுது அனைவருக்கும் நன்றாகவே அதனைச் செய்தான் என்று கூறுகிறார். இப்படி விவரமாகக் கூறினால் அது கவிதையாகாது. ஆதலின் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் அழகு பற்றி 'தருமன் தண்ணளியால்' என்றார். அறக்கடவுள் போன்றவன் என்று கூறிவிட்டமையின் தனது சொந்த விருப்பு வெறுப்புக்களைப் பாராட்டாதவன் என்பதுபெறப்பட்டுவிட்டதன்றோ?

அரசனுக்கு இரண்டு நிலையுண்டு. அரசியலைத் தாங்கி நடாத்தும் நிலையில் அவன் யாவருக்கும் பொதுவானவன். ஆனால் மனிதன் என்ற நிலையில் அவனுக்கு விருப்பு வெறுப்புக்கள் அனைத்தும் உண்டு. இவ்விரண்டு நிலைகளும் வேறு வேறானவை எனினும் ஒரே மனிதனிடம் இருக்கின்றனவாதலின் அரசன் ஒரு நிலையில் நின்று கடமை ஆற்றும் பொழுது மற்றொரு நிலை அவனை வந்து பாதித்தல் கூடாது. இக் கருத்தையும் தேவர் அழகாகக் குறிப் பிடுகிறார். 'ஈகையில் வருணன்' என்ற தொடரால் அரசனின் நடுவு நிலைமை குறிக்கப் பெறுகிறது. மழை எவ்வாறு தகுதி பாராது, வேண்டியவர் வேண்டாதவர் என்றுங் கவலை கொள்ளாமல் பொழி கிறதோ அவ்வாறு இவன் ஈகை அனைவருக்கும் பயன் பட்டது என்பதைக் குறித்தார்.

'தருமன் தண்ணளியால்
தனது ஈகையால்
வருணன் கூற்றுஉயிர்
மாற்றலின் வாமனே.
அருமையால் அழகிற்கு
ஐந்துடைத்
திருமகன் திரு மாநில
மன்னனே'

ஆதலின் இத்தகைய மன்னனுக்கு நிறைந்த புகழ் இருக்கும் என்பதில் ஐயம் என்ன? எனவே ஆசிரியர் 'வானந்தோய் புகழான்' என்று குறிக்கிறார்.

கவிகள் கண்ட கனவு - - -

- - - சேக்கிழார்

[க. சோமசுந்தரம்]

என்றும் அழியாத இன்பத்தை அடைவதுதான் மனித வாழ்க்கையின் லட்சியம். உலகத்தையே மோட்சமாக்கி விடுவதே கவிஞர்களின் பேராவல். இந்தத் துடிப்பு பலப்பல கனவுகளை அவர்கள் மனப் படத்தில் தீட்டுகிறது. சேக்கிழாருக்கு மற்ற கவிஞர் களைவிட அவசரம். ஆகவே, அவருக்கு இந்த உலகமே கைலையாய் அதில் வாழும் உயிர்களும் பொருள்களும் இறைமயமாய்த் தோற்றமளிக் கின்றன. சேக்கிழாரின் சில கனவுக்காட்சிகளை நாம் இப்போது காண்போம்.

நீர் நிறைந்து தளும்பும் ஒரு தடாகம். அதில் ஒரு கொடி படர்ந்திருக்கிறது. அக்கொடியின் இலை கள் நீர்நிலை முழுதும் படர்ந்திருக்கின்றன. அக் கொடியிலிருந்து ஒரு காம்பு மட்டில் நீர் பரப்புக்கு மேலே தலை நீட்டிக்கொண்டிருக்கிறது. அக்காம்பில் ஒரு மலர். இம்மலர் அலர்ந்து தன் நறு மணத்தால் நாலாபுறத்தையும் மணக்க வைக்கிறது.

இந்தக் காட்சியைக் கண்டதும் சேக்கிழாருக்கு

மற்றொரு பெரும் காட்சி கருத்தில் உதிக்கிறது.

> ''நிலவும் எண்ணில் தலங்களும் நீள்ஒளி
> இலகு தண்தளிர் ஆகஎ முந்தோர்
> உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
> மலரும் பெண் மலர்''

ஆகிய கயிலை மலைக்காட்சிதான் அது.

''பாருங்கள், கயிலைமலை எங்கேயோ தூரத்தில் இல்லை. இந்த உலகின் உயர்ந்த பகுதிதான் அது. மலருக்கும் கொடிக்கும் உள்ள அத்தனை உறவு இந்த உலகுக்கும் கயிலைக்கும் உண்டு'' என்று கவிஞர் நம்மிடம் உரைக்கிறார்.

ஆனால், இறைவன் கயிலையில் மாத்திரம் உறைவானேன்? நம் சிந்தனை ஓட்டம் சேக்கிழாரது மனத்துக்குப் புலனாகி விடுகிறது. அவர் பதிலளிக்கிறார்:

> நண்ணும் மூன்று உல கும் நான்
> மறைகளும் செய்ய வந்து எய்திய
> புண்ணியம் திரண்டு

இக்கயிலை ஆயிற்று. உங்கள் உள்ளத்திலும் அது போல் புண்ணியம் திரண்டால் இறைவன் அங்கும் எழுந்தருளுவான்'' என்கிறார் அவர்.

இறைவனைச் சேவிக்க பிரமன், திருமால் முதலான தேவர்கள் கயிலைக்கு வருகிறார்கள். அறிவரிய பெம்மானை அத்தனை எளிதில் கண்டுவிட முடியுமா? ஆகவே, கயிலை திருக்கோயில் வாயிலில் காத்திருக்கிறார்கள்.

நான்முகனுக்கு மாத்திரம் அவசரம். பிரிதோர் சமயம் வந்து கொள்ளலாமென்று வெளியே

வருகிறான். ஆனால் எத்தனை ஏமாற்றம் அவனுக்கு?

தூய மால் வரைச் சோதியில் மூழ்கி ஒன்று
ஆய அன்னமும் காணாது அயர்க்குமால்

என பிரமனிடம் மன அயர்ச்சியை விளக்குகிறார். அகந்தையால் அவனது பார்வை கூர்மையை இழந்து விட்டதாம்.

நான்முகனைப் போல் திருமால் திரும்பிவிட வில்லை. நாயகன் கழல் சேவிக்கத் தக்க சமயம் எதிர் பார்த்துக்காத்திருக்கிறார். இது கருடனுக்குத் தெரி யாது. பிரமனைக் கண்டதும் அவரும் திரும்பி விட் டாரோவென் றெண்ணி அவன் ஓடோடியும் வந் தான். கயிலையின் அடிவாரத்தில் இருந்த ஒரு குகை யில் விநாயகரின் வாகனமான பெருச்சாளியைக் கண்டான். அதன் பக்கத்தில் போய் பயபக்தியுடன் நின்றான். கவிஞர் காரணம் கூறுகிறார்.

மீதெழுப் பண்டைச் செஞ்சுடர்
இன்று வெண்சுடர் ஆனதென்று அதன்கீழ்
ஆதிஏ மைதாய் இடக்கலுற்றான்

திருமால் என்று பறவை வேந்தன் கருதிவிட்டானாம். இறைவனது செம்பொற்சோதி உருவத்தின் அடி முடி தேடிய அன்று, அந்த சோதி உருவம் வீசிய ஒளியை ஒத்த கயிலையின் பிரகாசம் நாராயணனை மயக்கி விட்டதென்று கருதும் கருடனுக்கு எத்தனை மயக்கம்? கருடனைப் போல் தங்களை அறிஞர்கள் என்று எண்ணிப் பிறரை நகையாடுபவர் எவ்வளவு பேர்? இறை வாழ்க்கையை விரும்பும் மனிதனுக்கு இந்த இரண்டும் கூடாது என்ற கவிஞரின் கருத்தே இந்த வர்ணனையில் வெளியாகிறது.

உலகின் புண்ணியம் திரண்டு கயிலையாயிற்று. அதில் வாழும் மக்களும் கயிலைவாசிகளாக வேண்டும். இதுதான் சேக்கிழாரின் ஆசை; லட்சியம். இந்த லட்சியத்தில் சித்தி பெறுவது எங்ஙனம்?

சிந்தையில் தோய்ந்த கவிஞரின் கருத்தில் காவிரியும் பாலாறும் தோன்றுகின்றன. ஒன்று எப்போதும் நீரோட்டம் உடையது. பிறிதொன்றோ வெறும் மணற் பரப்பு. அம்மணலைப் பறித்துக் கால் வாங்கினால் அல்லாமல் தண்ணீரைக் காண இயலாது. இரண்டுமே நதிகள்தாம். மலையிலே பிறந்து, நாட்டிலே வளர்ந்து கடலிலே கலப்பவைதாம். அவை தரும் பயனும் ஒன்றே. ஆனால் ஒன்றுக்கொன்று எத்தனை வேற்றுமை?

காவிரி நதி,

அண்ணல்பாகத்தை ஆளுடைய நாயகி
உள்நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

ஆனால் பாலாறோ,

பிள்ளை தைவரப் பெருகும் பால் சொரி
முலைத்தாய்போல்

மக்கட்கு ஊட்டி வளர்க்கும் தகைமை உடையது. இறைவனுடைய கருணையும் இவ்வாறுதான் சில சமயங்களில் வெள்ளமாகப் பெருகுகிறது. வேறு சில சமயங்களிலோ மக்கள் முயன்று அதை அடைய வேண்டி இருக்கிறது.

இந்த உண்மையை நன்றாக உணர்ந்தவள் காவிரி அன்னை. இறைவனருள் தன்பால் பூரணமாக உள்ளதென அவள் அறிந்திருந்தாலும்கூட, அது என்றும் நிலைத்திருக்க வேண்டும் என அவள் அவாவுகிறாள்.

அந்த ஆவலினுல் அவள் பல சிவாலயங்களைத் தொழு கிருள்.

வம்பு உலாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்

நதிகூட சிவனடியாரை ஒத்து பக்தியில் ஈடு பட்டுவிட்டது சேக்கிழாரின் கனவில்.

காவிரியில் ஓடுவது வெறும் நீரா? பக்தி நீரல்லவா? அப்புனலை உண்டு வளம் பெற்ற பயிர் களும்கூட, "அரனுக்கு அன்பர்ஆவின் சிந்தைபோல" கதிர்கள் அலர்ந்து தலைசாய்ந்து நிற்கின்றன. சேக்கிழாருக்கு இக்காட்சியை

பக்தியின் பாலர்ஆகிப் பரமனுக்கு ஆளாம்அன்பர்
தத்தமில் கூடினுர்கள் தலையினுல் வணங்குவதைத்
தான் இதனேடு ஒப்பிடத் தோன்றுகிறது.

பயிர்களின் நிலையே இதுவாயின் உயிர்களின் நன்மையைக் கூறவாவேண்டும்?

தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள் பைங்
கிள்ளை பாடுவ; கேட்பன பூவைகள்!

திருப்பதிகம் பாடும் ஞானம் கிளிகளுக்கு எப்படி வந்தது? நாகணவாய்ப் புட்களுக்குத்தான் அப் பதிகங்களை சிரத்தையுடன் கேட்கும் பக்தி எப்படி உண்டாயிற்று?

ஊர்விடை

வள்ளலார் திரு ஆரூரர் மருங்கெலாம்

வசிப்பவை அன்ருே அவை? காவிரிப்புனலில் முழுகி, அதனுல் வளம் பெற்ற தானியங்களை உண்பவை

அல்லவா அப்பட்சிகள்? ஆகவே, அவற்றிற்கு இயற்கையிலேயே இறைவன்பால் பக்தி தோன்றிவிடுகிறது

பயிர்களும் பறவை இனங்களும் இத்தகைய உயரிய பண்பில் வாழும் நாட்டில் மக்களும்

அரசுகொள் கடன்கள் ஆற்றி
மிகுதிகொண்டு அறங்கள் பேணிப்
பரவரும் கடவுள் போற்றிக்
குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி

சீரிய வாழ்க்கை நடத்துவதில் வியப்பேது?

மக்களின் பண்புகளைப் பலபடியாகப் புகழும் சேக்கிழார், மற்றோர் பெருமையையும் அவர்கள் இயற்கையாகவே பெற்றவர்கள் என்று போற்றுகிறார். ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி பழகிய பின்புதான் நட்பு உண்டாக வேண்டும் என்ற நியதி அவர்களுக்கு இல்லையாம்.

காண்தகைமை இன்றியும் முன்
கலந்த பெருங் கேண்மை

அவர்களிடம் சிறந்து விளங்குகிறது.

இந்த அன்புக்கு மூல காரணம் என்ன? மனம் செயல் லட்சியம் ஆகிய மூன்றிலும் அவர்களிடம் நிலவிய ஒற்றுமைதான். சேக்கிழாரின் காவிய மாந்தர் எல்லோருமே

ஆங்கவர் மனத்தின் செய்கை
அரன் அடிப்போதுக்கு ஆக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை
உயர்ந்த அஞ்செழுத்துக் காக்கி
தாங்கு கைத்தொழிலின் செய்கைத்
தம்பிரான் அடியார்க்காகத்

தொண்டுபுரிய ஆக்கி விடுகிருர்கள்.

அன்பினல் வாய்ந்த மனத்துத் திரண்ட சிந்தை உடைய அம்மக்கள் இறைவனை அடைய காட்டுக்கு ஓடிவிடவில்லை. தங்களுடைய தொழில்களையோ குடும்பங்களையோ விடுத்து கோவணுண்டிகளாகிவிட வில்லை. எல்லோரும் தங்கள் தொழிலில் – அது எத் தகையதாயினும் – அதில் முழுமனதுடன் ஈடுபட் டிருக்கிருர்கள். என்ருலும் அவர்களுடைய உள்ளம் "நின்ருலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தா லும் மன்ருடும் மலர்ப்பாதம் ஒருக்காலும் மறவாத" சீர்மையுடன் விளங்குகிறது. ஆகவே அவர்கள் எதைச் செய்தாலும் அதுவே சிறந்த தவமாகி விடுகிறது.

ஈறிலாதார் தமக்கன்பு தந்த அடியார்
செய்தனவே தவமாம் அன்ருே?

இதையேதான் கீதை கர்மயோகம் என்கிறது.

அன்பும் பரிவும் ஓங்கியபின் அங்கே வேற்று மைக்கு இடமில்லை. சேக்கிழாரின் கனவில்தோன்றும் மாந்தர் அனைவரும் சாதி வேற்றுமை தீண்டாமை முதலிய எல்லா வேற்றுமைகளும் ஒழிந்தவர்களாய் வாழ்கிருர்கள்.

திருநாவுக்கரசர் வேளாளர். அப்பூதி அடிகள் மறைப் பெரியார். அப்பூதி அப்பரைச் சந்திக்கு முன்பே அவரது பெருமைகளைக்கேட்டு அவரிடத்தில் பக்தி பூண்டார்.

மனைப்பால் உள்ள
அளவைகள், நிறைகள், மக்கள்
ஆவொடு மேதி மற்றும்
உள எலாம் அரசின் நாமம்

சாற்றி விடுகிறார். தாம் செய்யும் அறங்களைக்கூட திருநாவுக்கரசரின் பெயரைச் சூட்டிவிடுகிறார். காணாமலே அன்பு பூண்டவர்முன், அப்பரே நேரில் வந்து விட்டால் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

கரகமலம் மிசைபொழியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுளகம் பொலியத்
தரையின் மிசை வீழ்ந்தவர்தம் சரணகமலம் பூண்டார்

என அப்பூதியின் கரை கடந்த மகிழ்ச்சியை சேக்கிழார் கூறுகின்றார்.

அப்பூதி அடிகள் மாத்திரம்தான் அப்பரிடத்தில் பக்தி பூண்டுவிட்டாரா? இல்லை. அப்பூதியின் குடும்பமே அப்பரிடத்து அளவில்லாத காதல் பூண்டிருக்கிறது. மூத்த மகனான திருநாவுக்கரசு பாம்பு கடித்தும் கூட, தன்னால் அடியவர் அமுது செய்தல் தடைபடக்கூடாது என்று உயிரையும் வாழைக் குருத்தையும் கையில் பிடித்துக்கொண்டு தாயிடம் ஓடி வருகிறான். வீட்டுப்படி ஏறினதும் அவன் நிலை தடுமாறி விடுகிறது. குருத்தைத் 'தாயார் பால் வைத்து' படியின்மீதே இறந்து வீழ்ந்தான்.

அப்பூதியின் மனைவியோ மகன் இறந்த துக்கத்தை பொருட்படுத்தாது நாவுக்காரசருக்கு அமுது படைப்பதிலேயே ஆர்வம் காட்டுகிறார். மகன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தும்கூட அப்பெற்றோர்க்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை.

அறிவரும் பெருமை அன்பர் அமுதுசெய்து அருளுதற்குச்
சிறிது இடையூறு செய்தான் இவன்

என்றே சிந்தை நோகிறார்கள் அவர்கள். அப்பூதியின் அன்பின் உறைப்பு நம்மையும்தான் திகைக்க வைக்கிறது.

உலகமக்கள் தங்களுள் வேற்றுமை ஒழிந்து ஒரே இனமாய் – தொடரினமாய் – ஆக வேண்டு மென்ற சேக்கிழாரின் ஆர்வம், ஓர் அப்பூதி அடிகளை மாத்திரமல்ல; அப்பருக்கும் மறைச்சிறுவராகிய சம்பந்தருக்குமிடையே தந்தைக்கும் மகனுக்கும் உள்ளது போன்ற உறவைச் சிருஷ்டித்து விடுகிறது; அந்தணராகிய நீலநக்கருடைய யாகசாலையில் தாழ்ந்த குலத்தினரான திருநீலகண்டப்பெரும் பாணரையும் அவருடைய மனைவியாரையும் இரவு தங்க வைக்கிறது.

இப்படி எல்லாம் கற்பனை கண்டும்கூட சேக்கிழாரின் ஆசை அடங்கவில்லை. இங்கொருவர் அங்கொருவராக வேற்றுமை ஒழிந்திருந்தால் போதுமா? உலகம் எல்லாம் – மக்கள் மாத்திரமல்ல, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர் வாழ்வன, நிற்பன எல்லாம்– சிவனாக வேண்டும்.

தெய்வப் பெருமான் திருவாரூர்ப்
பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத்தனைய மணி கண்டர்
வடிவேயாகிப் பெருகு ஒளியால்
மொய்வைத்து அமர்ந்த மேனியர்

ஆம். பரிசுகண்ட நமிநந்தி அடிகளின் மனப்பான்மையை ஒவ்வொரு மனிதனும் அடையவேண்டும்.

புனலும், பயிர்களும், உயிர்களும் தெய்வநெறி நிற்கும் உலகில் இயற்கை நிகழ்ச்சிகளும் அன்பின் திறத்ததாகவே நிகழ்கின்றன.

ஞானசம்பந்தருடன் வந்த அடியார்கள் தன்னுடைய வெம்மையினல் பெரிதும் களைத்துவிட்டார்களே அன்பருக்கு எத்தனை தீங்கிழைத்து விட்டோம் என்றஞ்சியே சூரியன் அஸ்தமிக்கிருன்.

> உய்யவந்த சம்பந்தர் உடன் வந்தார்க்கு
> எய்துவெம்மை இளைப்பு அஞ்சினன்போலக்
> கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்துபோய்
> வெய்யவன் சென்று மேற்கடல் வீழ்ந்தனன்

பகலவன் மறைந்ததும் இருள் பரவுகிறது. எப்படிப்பட்ட இருள் அது?

> வஞ்சமாக்கள்தம் வல்வினையும் அரன்
> அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
> நெஞ்சும் அன்ன இருண்டது நீண்டவான்

கருணைக்கடலான பரமன் உலகம் இருளில் தவிக்க விட்டுவிடுவதில்லை. அஞ்ஞானிகளுக்கு அறிவுப்பிரகாசம் தர வெண்ணீற்றை அளித்திருக்கிருன் அல்லவா? அதுபோல இருண்ட வானத்திலும் வெண்மதியை வைத்துவிடுகிருன்.

> தோற்றும் மன்னுயிர்க் கெல்லாம் தூய்மையே
> சாற்றும்; இன்பமும் தண்மையும் தந்து, போய்
> ஆற்ற, அண்டம் எலாம்பரந்து அண்ணல்வெண்
> நீற்றின் பேர்ஒளி போன்றது நீள்நிலா.

இரவு சென்று, பொழுது புலர்கிறது. கதிரவன் வெகு வேகமாக ஏழ்ப்பரித்தேர் மேலேறி ஓடி வருகிருன். எதற்காக இந்த வேகம்? சேக்கிழார் கூறுகிருர்:

போதஞானப் புகலிப் புனிதரை
சீதமுத்தின் சிவிகைமேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின் வந்து ஏய்தினன் வெய்யவன்

சூரியவன் தன் தன்மையினல் கொடியவன் தான். எனினும் அடியார்க்குப் பெருமை விளைவதில் அவனுக்குக்கூட அத்தனை மகிழ்ச்சி.

மக்களும் மாக்களும் இயற்கையும் செயற்கையும் ஒன்ருேடொன்று உள்ளும் புறம்பும் ஒத்துவாழும் நாட்டின் அரசனும்

மண்ணில் வாழ்தரு மண்ணுயிர்கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம் பெருங்காவலான்

ஆக விளங்குவதில் ஆச்சரியமேது? அவனைக் கவிஞர்,

செற்றம் நீங்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்றநீதியும் தன்பெயர் ஆக்கினன்

எனப்போற்றுவது உயர்வு நவிர்ச்சி இலதன்ருே?

சேக்கிழாரது கனவு கலைகிறது. இவ்வுலகத்தைத் திரும்பிப் பார்க்கிருர். நல்லவற்ருேடு தீயனவும் விரவிக்கிடப்பது அவருடைய பார்வையில் தென்படுகிறது. அவர் உள்ளம் பச்சாதாபத்தால் சுருங்குகிறது. ஆயினும்,

'அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கிறது. உலகமும் இத்தகையது தானே' என்று தேறுகிருர். கொடியவர்கள் இருக்கிருர்கள் என்பது உண்மைதான், இருந்தாலும் எத்தனை அன்பர்களும் நல்லவர்களும் இந்த உலகில் வாழ்கிருர்கள்? ஓய்தல் ஒழிதல் இல்லாமல் அவர்கள் காதல் உள்ளம் ஓங்கி

வளர்ந்து உலகை எல்லாம் சொர்க்கமாய், மோட்ச மாய், முடிவிலின்ப வீடாய் மாற்றி விடுகிறதே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பிஞல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அவர் அடியார் அவர்வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவு உலகெலாம்

எப்போதும் இத்தகைய மெய்யடியார்கள் — அன்பர் கள் — உலகம் எலாம் பரந்து சென்று, இவ்வுலகைக் கயிலையாக்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்று சேக்கிழார் கனவு காண்கிருர்.

சேக்கிழார் கண்ட கனவு மட்டும் உண்மையாக நிகழ்ந்து விட்டால்.........

கவிகள் கண்ட கனவு - - -

- - - கம்பர்

[டி. பி. மீனாட்சிசுந்திரம்]

தமிழ்ப்பா உலகில் இமயமலையாக விளங்குபவர் கம்பரே எனலாம். அவர் கண்ட கனவு என்ன? நம் எதிர் தோன்றும் உலகம் குற்றம் குறையும் நிறைந்தது. குற்றம் குறை இல்லாததாக இருந்தால் எவ்வாறு விளங்கும்? இவ்வாறு எண்ணிப்பார்த்தவர் இவ்வுலகில் பலர். அந்த எண்ணங்களையே அவர்கள் கண்ட கனவு என்று பேசுகிறோம். *Plato* என்ற யவனப் பேரறிஞர் *Republic* அல்லது குடியரசு என்று தாம் கண்ட கனவை ஒரு நூலாக எழுதியுள்ளார். இதனை உலகம் இன்று போற்றுகிறது. ஏராஸ்மஸ் என்பாரது 'உடோபியா' என்ற நூலும் கற்பனை உலகின் மேல்வரிச்சட்டமாக இடைக்காலத்தில் அமைந்தது. இந்நாளிலும் *H. G.* வெல்ஸ் போன்றவர்கள் உலகின் எதிர்கால வடிவத்தினைப் பற்றி கனவு கொண்டுள்ளார்கள். பைபிலில் வரும் தீர்க்கதரிசிகள் பேச்சுக்களிலும் இத்தகைய கனவினைக் காணலாம். கீழ்நிலையடைந்த இடைக்காலத் தமிழ் நாட்டில் பாவாணர்கள் இத்தகைய கனவுலகில் வாழ்ந்து நனவுலகின் துயரத்தை மறந்தனர்; மக்களையும் மறக்கச் செய்தனர். தலபுராணங்கள் எனப்

பலபல தோன்றியவற்றில் எல்லாம் தொடக்கத்தில் நாட்டுப்படலம், நகரப்படலம் என அப்புலவர்கள் குறையிலா உலகெனத் தாம் கண்ட கனவினை கூறி வரக்காண்கிறோம். இந்தக் கண்கொண்டு இந்நூல்களை ஆராய்வது சுவையுடையதாகும். இவற்றிற்கெல்லாம் ஊற்றுச் சங்கப்பாக்களில் உண்டு. நானிலம் திணைமயக்கம், பட்டினம் என்று சங்கப் புலவர்கள் புனைந்துரைத்தவையே பின்னுள்ளோருக்கு வழிகாட்டியாயின. ஆனால் சங்க நூலில் அவை முழுதும் கனவன்று. அங்கே அங்கே ஒவ்வொரு குறிப்பாய் ஒவ்வோர் அழகாய் விளங்கியவை அனைத்தினையும் ஒரே இடத்தில் உள்ளனபோலக் கூறினரேயன்றி அப்புலவர்கள் முழுவதும் இல்லாதவற்றையே கூறவில்லை. கனவெனக் கூறத்தக்க முறையில் முதலில் பாடியவர் கம்பரே எனலாம். நாட்டுப்படலம் நகரப்படலம் எனப்பிரித்து அக்கனவினை முதலில் வகுத்தவர் அவரே ஆம். சூளாமணியிலும் சிந்தாமணியிலும் இத்தகைய குறிப்புகள் இருந்தாலும் இந்த வகையில் சிறந்து விளங்குவது கம்பராமாயணம் என்றே முடிவு கூறுதல் வேண்டும்.

பல்லவர்களும் பாண்டியர்களும் போரிட்டுத் தமிழ் வலிகுன்றி நின்றார்கள். பின்னர் எழுந்தது சோழப்பேரரசு. இது கங்கைக்கரைவரை சென்றது; பசிபிக்கடல் வரை சென்றது. இது தோன்றுகின்ற போது குன்றியிருந்த தமிழகம் புத்துயிர் பெறலாயிற்று. அந்தப் புத்துயிர்ப்பினைக் கம்பராமாயணத்தில் காண்கிறோம்.

பத்தாம் நூற்றாண்டையது இந்நூல் என்று கருத இடம் உண்டு. கீழ்நிலையடைந்த தமிழகத்தின்

குறையெல்லாம் இல்லாததொரு நாட்டினைத் திரு நாடாகப் புனைந்து பார்க்கிறார் கம்பர்.

வானத்தைப் பார்த்து வாழ்கின்றான் முன் தமிழ் உழவன். வான் சிறப்பினைப் பாடுவது திருவள்ளுவர் மரபு. கம்பன் அந்த மரபினை மறக்கவில்லை. ஆற்றுப் படலம் பாடுகின்றார். 'தெய்வந் தொழா அள் கொழு நற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்ற உண்மையை வற்புறுத்திக்கொண்டு தொடங்குகிறார், கம்பர். பெண்களின் கண்கள் நெறியை விட்டுப் புறம் செல்லாமையே நாட்டின் அழகு; நாட்டின் உயிர்நிலை. அதனாலேயே அங்கு ஆறு சிறந்து விளங்குகிறது. பெண்களைக் கெடுக்கும் ஆண்களும் அங்கு இல்லை.

இராம ராச்சியம் நிலை நாட்டப்பிறந்த இராமர் பிறந்த சூழ்நிலை இது. இதற்கு எதிர்த்தட்டுதான் இராவணன் வாழும் இலங்கை. கற்பு வாழும் நாடு இராம ராச்சியம். கற்பழிக்கும் நாடு இராவண ராச்சியம். இப்படி முதலிலேயே வேற்றுமை காட்டித் தொடங்குகிறார் கம்பர். கடவுள்போலச்செல்லுகிறது ஆறு. தெய்வீக நினைவே வருகிறது. ஐந்திணை நில மெல்லாம் ஆறு பரவுகிறது. ஒரு வெள்ளம் மலையில் தொடங்கிப் பலபல நீர்நிலைகளாய் கடலில் புகுகின்றது. தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்து பல் பெரும் சமயஞ் சொல்லும் பொருளும் போல் பரந்து ஒன்றாயிற்று. கடவுள் காட்சியாகப் பார்ப்பது இராம ராச்சியக் காட்சி. உள்ளே நிற்கும் அடிப்படையை மறந்து மேல் மினுக்கில் மயங்குவது இராவண ராச்சியம்.

ஆற்றல் வளர்வது நாடு. பயிரால் தழைப்பது நாடு. மருதம் என்பதே நாகரிகத்தின் இருப்பிடம். ஆனால் சங்ககாலத்தில் மருதம் பரத்தையர் வாழ்வாகக் குறையுண்டு கிடந்தது. திருவள்ளுவர் அக்குறையை நீக்கினார். இரண்டு உயிரும் அன்பில் பிணைபட்டு படிப்படியாக ஒன்றுகின்ற ஊடாட்டமே மருதம் அல்லது ஊடல் என்று விளக்குகிறார், வள்ளுவர். இந்த ஏற்றத்தின் பின்னே மருதம் அரசு வீற்றுகின்ற காட்சியைக் கம்பர் காண்கிறார். உழவின் கொலு வீற்றிருக்கையே மருதம். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றையோர் தொழுதுண்டு பின் செல்பவர். இந்த விருப்பைப்பாடுகிறார் கம்பர் உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ. இதோ திருவோலகக் காட்சி. பாடல், ஆடல், திரை, விளக்கு, அரசர்.

தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைக்கண்
விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகளினிது பாட மருதம் வீற்றிருக்குமாதோ.

இந்த உழைப்பின் விருப்பில் வானமும் வையமும் ஒருங்கு கலந்து திளைக்கின்றன. இராம இராச்சியம் இவ்வாறு தொடங்குகிறது. இராவண ராச்சியத்தில் இன்பம் வெள்ளமிடுகின்றது. தம் உழைப்பில்லை. பிறர் உழைப்பு அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர் பாடுநராகிக் களிக்கின்றாரலால் கவல்கின்றார் ஒருவரைக்காணேன் என்கிறான் அனுமான். உழைப்பின் வந்த உறுதியன்று. கொள்ளைப்பொருள்; அடிமை

நாடுகளை எலும்புக்குவியல்களாக்கி அங்கிருந்து சுரண்டி எடுத்து வந்த பொற்குவியல்களே இலங்கை எங்கும். இந்நாளைய சுரண்டற் கொள்கையின் பேரொளியாக இலங்கை விளங்குகின்றது. உழைப்பின் எழுந்த பேரொளியாக விளங்குகிறது, இராம ராச்சியமே இனி விளையப்போகும் கோசலநாடு.

ஆனால் இந்த உழைப்பு தன்னலத்தில் வேரூன்றியதன்று. உலகெலாம் வாழக்கேடொன்றும் இல்லை என்ற அடிப்படையில் ஓங்கி எழுந்து மிளிர்வது. கோசலநாட்டினர் உழுகின்றனர். களை பிடுங்குகின்றனர். நெல்லை அறுவடை செய்கின்றனர். வித்திட்டிருப்பர். ஆனால் கம்பர் வித்திட்டதைக் கூறவே இல்லை. வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம் என்ற குறளை அடியொற்றிச் செல்கிறார் போலும். உழைப்பினிடையே ஒரு ஓய்வு, ஓர் அமைதி காண்கிறார் கம்பர். பலர் பலர் குளிக்கும் நீரிடையே சங்கும் அமைதியாகத் தூங்குகிறது; அவர் செல்லும் துறையில் தூங்கும் சிப்பி. மக்கள் புழங்கும் நிழலில் எருமை உறங்குகிறது. உழைத்து உலவும் மக்கள் அணிந்த மாலையில் வண்டு உறங்குகிறது. கூட்டுறவு வாழ்க்கையே இராம ராச்சியம், கீழ்நிலையுயிர்களும் இவ்வாறு வாழ்கின்றன.

சேலுண்ட ஒண்கணாரித் திரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்ந்ததிய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளம் காப்பச் சோர்ந்து
பாலுண்டு துயிலக் கண்டிதேரை தாலாட்டும் பண்கள்

வீணைக் கொடியோன் இராவணன்; இசையரசன்– என் பயன்? எல்லாம் தன்னலம். இங்கோ தேரையும் தாலாட்டுகின்றது. தன் இனத்தையன்று, அன்னக்குஞ்சினை. எருமையும் பால் சுரக்கின்றது. ஆனல் தன்னினத்திற்காக அன்று; அன்னத்திற்காக. ஈதே கூட்டுறவு வாழ்வு!, குகனும் என் தம்பி; சுக்ரீவனும் என் தம்பி; விபீடனும் என் தம்பி என உலகம் முழுவதையும் இராமர் ஒரு குடும்பமாகக் கண்டார். இந்த எருமையும் கன்றும் அன்னமும் தேரையும் ஒரு குடும்பமாக வாழும் கோசலையிற் பிறந்ததாலன்றோ!

முன் வற்புறுத்திக் கற்பித்ததையே முடிந்த முடிபாகக் கூறுகிருர் கம்பர்.

> பொற்பில் நின்றன பொலிவு. பொய்யிலா
> நிற்பில் நின்றன நீதி; மாதரார்
> அற்பில் நின்றன அறங்கள். அன்னவர்
> கற்பில் நின்றன கால மாரியே.

நற்குணப் பொற்பே அழகு; உண்மையே நீதி; அன்பே அறம்; கற்பே மழைச் செல்வம். இத்தகையது இராம ராச்சியம். கற்புடையவள் கதை தானே இராமாயணம்: இதற்கு எதிரிடையான இராவண ராச்சியத் தைக்கண்டு வயிறெலாம் குமுறி எரிந்து சிரிக்கின்ருன் கும்பகருணன்.

> ஆசில் பரதாரம் அவை அஞ்சிறை அடைப்போம்
> மாசில் புகழ் காதலுறுவேம் வளமைகூரப்
> பேசுவது மானம். இடை பேணுவதும் காமம்
> கூசுவசு மானிடரை நன்று நமக் கொற்றம்.

கம்பர் பின் அயோத்தி நகரம் சேருகின்ருர். பல பல செல்வம்; பலபல இன்பம். பொது உடைமை

பேசுகின்றது இந்நாளைய உலகம். முடிவிற் பயன் என்ன? எல்லோரையும் ஏழைகளாக்கி எல்லோரையும் அறிவிலிகள் ஆக்குவதே ஆம். கம்பன் காணும் காட்சி என்ன? எல்லோரும் நிறைந்த செல்வர்; பின் செல்வர் என்று கூறித்தான் பயன் என்ன? எல்லோரும் நிறை அறிஞர்; பின் அறிஞர் என்று கூறித் தான் பயன் என்ன? திருடனும் இல்லை. பிச்சைக் காரனும் இல்லை, இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் என்பதனை இவ்வாறு காண்கிறார் கம்பர்.

கள்வர் இலாமைப் பொருட்காவலும் இல்லையாதும்
கொள்வர் இலாமை கொடுப்பவர்களும்
இல்லைமாதோ
கல்லாது நிற்பார் பிறர் இன்மையிற் கல்விமுற்ற
வல்லாருமில்லை அவை வல்லார் அல்லாருமில்லை
எல்லாரும் எல்லாம் பெரும் செல்வமும் எய்ததாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ!

கலைதான் பொதுஉடமை. அதைப் பலரும் துய்க்கலாம். குறைவதில்லை. அது துன்புறுவதுமில்லை. பொதுநிலையில்வளர்கிறது. அதனை அவ்வாறு பலரும் துய்க்கும்போது கலைஞன் அகமகிழ்கிறான். காவல் இல்லை. கட்டு இல்லை. பொதுஉடமை இயல்பாக வளரும் இடம் கல்வியே. அப்போது பிறர்க்கென வாழும் பெருந்தகைமை ஓங்குகிறது. தவம் என இனிக்கிறது. அறம் பூக்கின்றது. இன்பம் பழுக் கின்றது. இதுதான் இராம ராச்சியம்.

ஏகம் முதற் கல்வி முளைத்தெழுந்து எண்ணிற்கேள்வி
ஆகம் முதற் திண் பணைபோக்கி அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித்தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்பீன

இது அயோத்திமாநகரமெனும் பழமரம்.

இதன் அரசன் எத்தகையவன்? இன்பபோகப் பழமாய் இருந்து குடிமக்களுக்கு ஊட்டுபவன் அரசன். நாட்டிற்கு உயிர் மன்னனே என்பது பழங் கொள்கை. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்பது புறநானூறு. ஆனால் கம்பரோ மன்னனை உடலாக்கி உயிர்களை உயிராக்குகின்றார். உடலம் போகாலயம்: இன்பம் நுகரிடம். இன்பங்களை நுகரச் செய்து உடன் உழலுகின்றவரே அரசன். முடியரசும் குடியரசும் விளங்கிடும் நிலை இது.

உயிரவான் பூணணி மடங்கள் மொய்ம்பினான்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினார்

அரசியற் சூழ்ச்சி – மந்திராலோசனை, இராம ராச்சியத்திலும் நடைபெறுகிறது அறம் வளர்த்த பெரியோர்கள் கண்ணாக அமைகின்றார்கள்; தன்னல மின்றி பொதுநலம் கூறுகின்றனர். தசரதன் தன் அமைச்சர் வழி நிற்கின்றான். இராமன் விபீஷணனை முடிவில் சரணாகக் கொண்டாலும் எதிர்ப்பார்க் கொள்கையையும் இன்பமாகக் கேட்கிறான். ஆனால் இராவணனோ தனக்கு இனிக்கப் பேசாதாரை மாமனானாலும், தம்பியானாலும், பிள்ளையானாலும் ஓட்டுகின்றான்; வாயடக்குகின்றான். ஆமாம் பூசாரிகளுக்கே அங்கு இடமுண்டு. சிறியாரே மதிக்கும் செல்வம் அது. இடிப்பாரை இல்லாத தமராமன்னன் கெடுப்பார் இலானும் கெடும் என்பது உண்மையாயிற்று. இராமனிடம் அறமே வடிவமானது. அன்பே உயிர் ஆனது. இன்பமே வெள்ள மிடுவது

இராம ராச்சியம். இராவண ராச்சியமோ மறமே வடிவமானது. அறமும் உள் புகாது என்றார் கம்பர். அயோத்தி அரசனின் கண்கள் வரியேரி

தம்முயிர்க்குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போது
வெம்மையைத் தாங்கிநீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
எம்மையில் திறம்பில் செல்லாத் தேற்றத்தால் தெரியும் காலம்
முழுமையும் உணரவல்லார் ஒருமையே மொழியும் நீரர்

இராவணனின் அமைச்சியலோ இதற்கு முற்றிலும் மாறுபட்டது. சீதை கூறுகிறாள்:

கடிக்கும் வல்லரவும் கேட்கும் மந்திரம் களிக்கின்றோயை
அடுக்கும் ஈதடாது என்று ஆன்றரதுவோடு அறிவுகாட்டி
இடிக்குவார் இல்லை உள்ளார் எண்ணிய எண்ணி உன்னை
முடிக்குறுர் என்றபோது முடிவன்றி முடிவதுண்டோ.

கலையீடுபாடும் களியாட்டமுமாய் முடிந்தது. கற்பரசி மண்டோதரி மனைவியாய் இருந்தும் காமவெறியால் கெடுவதனை தடுப்பதற்கில்லை. சுரண்டற் கொள்கையில் பொலிகிறது இலங்கை. கற்பு எங்கே? அறம் எங்கே? என்ன காவல்! என்ன மேன்மை! என்ன போலி இன்பம்!

கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்புகாது இனிவானவர் புகார் என் கைவம்பே

திறம்புகாலத்து யாவையும் சிதையினும் சிதைய
அறம்புகாதலு அந்த அணி மதிற்புறத்து
நின்றகத்துனே.

என்று பாடுகிறார் கம்பர். வீணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம் என்று பாரதியார் இவர்களையும் நிந்தனை செய்கிறார். அயோத்தியோ உழைப்பின் விருப்பு; அன்பின் விளைவு: அருளின் வாழ்வு; அறத்தின் கோலம்; கூட்டுறவு குடும்பம்; உலக ஒற்றுமை; அறிவின் விளக்கம்; இன்ப வெள்ளம்.

மேவரும் உணர்வின் முடிவிலாமையினால் வேதமும்
ஒக்கும் வினைபுகலாற்
தேவரும் ஒக்கும் முனிவரும் ஒக்கும் திண்பொறி
அடக்கிய செயலால்
காலிற்கலையூர் கன்னியை ஒக்கும் சூலத்தாற்
காளியை ஒக்கும்
யாவையும் ஒக்கும் பெருமையாய் எய்தற்கருமை
யின் ஈசனை ஒக்கும்.

கம்பர் கண்ட கனவு இன்றைக்கும் பொருளுடையதாக விளங்கவில்லையா?

வ. உ. சி. கண்ட பாரதி

***

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் அமரகவி பாரதியாருடன் பழகிய நாட்களில் நடந்த உணர்ச்சிமிக்க சம்பவங்களை மெய்சிலிர்க்க இச்சிறு நூலில் எழுதியுள்ளார்கள். சிதம்பரனார் தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசிந்ததைக்கேட்ட பாரதியார், ஆவேசம் ததும்ப, உள்ளங்குமுற சொன்னார்:

"சிதம்பரம், மானம்பெரிது! மானம் பெரிது. ஒரு சில ஒட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக் கப்பலை விற்று விட்டார்களே, பாவிகள்! அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொருக்கி வங்காளக் குடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்!"

என்பது போன்ற உயிரும் உணர்வும் நிரம்பிய பலப்பல சம்பவங்களை இந்நூலில் காணலாம்.

விலை அணா எட்டு

***

இமயப் பதிப்பகம்,

நாகப்பட்டினம்.

சிறந்த புத்தகங்கள்

***

மாஸ்கோ பாதை - டி. என். ராமச்சந்திரன்	ரூ.	1-8
நமது சரித்திர பாரம்பர்யம்	,,	2-0
சிந்தனுவாதிகளின் சத்திய சாதனை	,,	0-12
காதலி - அண்டோன் செகாவ்		2-8
மீளாத காதல் - மாக்ஸிம் கார்க்கி		1-0
இன்ப வாழ்க்கை - தோ. ந. வீரராகவன்		1-8
வாழ்வு மலர்ந்தது - க. கணபதி பி.ஏ., பி.எல்.		2-0
மனைவியைப்பற்றி...	,,	1-0
கசக்கிய மொட்டு -	,,	1-8
யார் மனிதன்? - அ. டேவிட் பிச்சை		3-0
பாட்டுக்கொரு புலவன் - மயிலன்		1-4
திருமணப் பரிசு - தொகுப்பு நூல்		2-8
கவிகள் கண்ட கனவு -	,,	0-8
குறள் வழி - மூவர் சொற்பொழிவுகள்		0-8
திருக்குறள் மூலம்		0-8
சாந்திமொழி - காந்திஜியின் மணிமொழிகள்		0-6

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102817
EGMORE, MADRAS

***

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம்

திருமணப் பரிசு

தயாரிப்பு: தோ. ந. வீரராகவன்

ஆசிரியர் வீரராகவன் புதுமணத் தம்பதிகளின் திருமணப் பரிசுக் கென்று இப் புது நூலைத் தயாரித்திருக்கிருர். ஒழுக்கமும் கட்டுப் பாடும் நிறைந்த நல்ல சமுதாயமொன்று ஏற்படவேண்டுமாயின், மக்களின் தாம்பத்திய வாழ்க்கை ஒழுங்காக நடக்க வேண்டும். ஆசிரியர் இந் நல்ல தாம்பத்திய வாழ்க்கைக்குரிய பண்புகளை இந் நூலில் பல பெரியோர்களின் கட்டுரைகளிலிருந்து விளக்குகிருர்.

இதில் காணும் கட்டுரைகள் யாவும் இனியன. இளந் தம்பதிகள் இன்றியமையாதது படிக்கவேண்டிய ஒன்று. புத்தகத்தின் பார்வை, தாள், அச்சு, பொருளடக்கம் யாவும் முதல் தரம்.

—சுதேசமித்திரன்.

விலை ரூபாய் இரண்டரை.

...ப் பதிப்பகம் :: நாகப்பட்டினம்